**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 332/2019 |
| Name | : செல்வராஜ் |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 26.03.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது தலைமை அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமையியல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் முன்பு உடுமலை அரசு மருத்துவமனையில் பணிபுரிந்தபோது கடந்த 11.12.2016 ம் தேதி அன்றும் மதியம் சுமார் 3..30 மணி அளவில் கன்னிமுத்து(வயது 55) என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் மரக்குச்சியால் தோட்டத்தில் வைத்து அன்று சுமார் அரை மணிக்கு முன்பாக அடித்தாக கூறினார். அவரை பரிசோதித்தபோது வலது பக்க தலையின் மேற்புரத்தில் 5x1, 1x1 என்ற அளவில் சிதைந்த வெட்டுக்காயம் இருந்தது. அவரை நான் உள் நோயாளியாக சேர்த்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்தேன். **மேற்படி விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 11.12.2016 ம் தேதி அன்றே மதியம் 3.40 மணி அளவில் சரஸ்வதி (50) என்பவர் சிகிச்சைக்காக வந்தார் அவர் தன்னை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் தனது அடையாளம்

தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதித்தபோது  அவரின் தலையின் வலது பக்க 6x1, 1x1 என்ற அளவில் சிதைந்த வெட்டுக்காயம் இருந்தது. அவர் தனக்கு இரண்டு மூன்று தடவை வாந்தி வந்ததாக கூறினார். நான் அவரை மேல் சிகிச்சைக்காக கோவை மருத்துவமனை கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் அங்கு 24.12.2016 வரை சிகிச்சை பெற்றார். அங்கு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கூறியதன் பேரில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். **மேற்படி காயச்சான்று அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மேற்படி சரஸ்வதியின் விபத்து பதிவேட்டு சான்றிதழ் நகல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்ப்படுகிறது (மேற்படி ஆவணம் தற்போது நகலாக குறியீடு செய்வதால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது)** இந்த வழக்கின் சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயம் ஆனது மேற்படி சம்பவத்தின்போது அவர்கள் சொன்னவிதத்தில் சொன்னபடியாக ஏற்பட வாய்ப்புள்ளது.  இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் போதிய வாய்ப்பு கொடுக்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

ஒப்பம்/—கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்